## அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006

## மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வு, மார்ச்– 2024

## மறுமதிப்பீடு / மறுகூட்டல் தேர்வு முடிவுகள் வெளியிடுதல் குறித்த செய்திக்குறிப்பு

நடைபெற்று முடிந்த மார்ச் – 2024, மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வு எழுதி, மறுகூட்டல் (Re–total), மறுகூட்டல்–2 (Re–total–II) மற்றும் மறுமதிப்பீடு (Revaluation) கோரி விண்ணப்பித்தவர்களுள், மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது பதிவெண்களின் பட்டியல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் Notification என்ற பகுதியில் 21.06.2024 (வெள்ளிக் கிழமை) அன்று பிற்பகல் முதல் வெளியிடப்படவுள்ளது. **இப்பட்டியலில் இடம் பெறாத பதிவெண்களுக்கான விடைத்தாட்களில் எவ்வித மதிப்பெண் மாற்றமும் இல்லை** எனத் தெரிவிக்கப்படுகிறது.

மறுகூட்டல் / மறுமதிப்பீட்டில் மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்கள் மட்டும், உடன் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து தங்களுக்கான திருத்தப்பட்ட மதிப்பெண்கள் அடங்கிய மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

**தேதி:** 19.06.2024
**இடம்: சென்னை–** 600 006.